


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி 115 அ வட்டக்கழகம், மல்லன் பொன்னப்பன் தெருவில் 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, எ.ஆர்.பி.எம்.காமராஜ் உள்ளிட்டோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம், திருவல்லிக்கேணி பகுதி, 116 அ வட்டக்கழகத்திற்கு உட்பட்ட பி.வி தெரு பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 1000 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்!



**10.03.2026 நிகழ்வுகள்**

## கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!

**1. ஒன்றிய அரசு வர்த்தக பற்றாக் குறையை தீர்க்க எடுத்திருக்கும் நடவடிக்கை என்ன?**

**டி.ஆர்.பாலு**



2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது நடப்பு நிதியாண்டில் வர்த்தக பற்றாக்குறை 25 சதவீதம் அதாவது 25 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது குறித்து திமுக பொருளாளர் டி. ஆர். பாலு எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார். வர்த்தக பற்றாக்குறை இவ்வளவு அதிகமாக இருப்பதற்கான காரணங்கள் என்ன? இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய தாக்கங்கள் என்ன? மற்றும் அரசாங்கம் இந்த மோசமான போக்கை எவ்வாறு நிவர்த்தி செய்யப் போகிறது? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**2. நீட் கட்-ஆஃப் குளறுபடிகள் ஏன்? எய்ம்ஸ் மருத்துவமனை பயன்பாட்டிற்கு வருவது எப்போது?**

**பி.வில்சன்**



அகில இந்திய ஒதுக்கீட்டிற்கு மாநில அரசு வழங்கிய இளங்கலை மற்றும் முதுகலை மருத்துவ இடங்களில் கடந்த மூன்று ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட மொத்த OBC மருத்துவ இடங்களின் எண்ணிக்கை குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் பி. வில்சன் கேள்வி எழுப்பியுள்ளார். கடந்த மூன்று ஆண்டுகளில் ஒவ்வொரு பிரிவிலும் NEET PG தகுதி கட்-ஆஃப்களின் விவரங்கள் மற்றும் சரிவுக்கான காரணங்கள் என்ன? 2014 முதல் அறிவிக்கப்பட்ட AIIMS இன் விவரங்கள், பட்ஜெட் ஒதுக்கீடு மற்றும் அவற்றின் தற்போதைய முன்னேற்றம் என்ன? அவற்றின் தாமதத்திற்கான காரணங்கள் என்ன? எனும் முக்கியமான கேள்விகளை அவர் எழுப்பியுள்ளார்.

**3. உர இறக்குமதியில் சீனாவை சார்ந்திருப்பது ஏன்? உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தாது ஏன்?**

**கே.ஆர்.என். ராஜேஷ்குமார்**



உர இறக்குமதியில் இந்தியா சீனாவை சார்ந்திருப்பது குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் கே. ஆர்.என் ராஜேஷ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார். அதில் அவர் TMAP மற்றும் யூரியா-கரைசல் தயாரிப்புகள் இறக்குமதி செய்யப்பட்ட அளவு எவ்வளவு? அக்டோபர் 2025 இல் சீனா ஏற்றுமதியை நிறுத்தியதைத் தொடர்ந்து உர விலைகளில் ஏற்படக்கூடிய சாத்தியமான உயர்வை அரசாங்கம் மதிப்பிட்டுள்ளதா? உள்நாட்டு உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள்? என்றும் கேட்டுள்ளார்.

**3. இந்திய உணவுக் கழகத்தின் செயல்பாடுகளை மேம்படுத்துக!**

**ஆர்.கிரிராஜன்**



இந்திய உணவுக் கழகம் (FCI) மற்றும் மத்திய கிடங்கு கழகம் (CWC) ஆகியவற்றின் செயல்பாட்டு திறன்களை உறுதி செய்ய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் ஆர். கிரிராஜன் கேள்வி எழுப்பியுள்ளார். அதில் அவர் உணவு தானியங்களின் கொள்முதல், சேமிப்பு மற்றும் விநியோகத்தில் அதன் நிதி மேலாண்மையை மேம்படுத்துவதற்காக சாந்தா குமார் குழு பரிந்துரைத்த சீர்திருத்தங்களை அரசாங்கம் செயல்படுத்தியுள்ளதா? எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**4. ஒன்றிய அரசின் பாரத் டாக்ஸி பயன்பாட்டுக்கு வருவது எப்போது?**

**டி.எம்.செல்வகணபதி**



2002ஆம் ஆண்டு பல மாநில கூட்டுறவு சங்கச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட இந்தியாவின் முதல் கூட்டுறவு வாடகை கார் சேவையான பாரத் டாக்ஸி குறித்து திமுக மக்களவை உறுப்பினர் செல்வகணபதி கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த சேவை நாட்டின் மற்ற பகுதிகளில் எப்போது அறிமுகப்படுத்தப்படும்? முக்கிய பொது மற்றும் தனியார் பங்குதாரர்களுடன் போடப்பட்டிருக்கும் ஒப்பந்தங்கள் யாவை? இந்த தளம் தொடங்கப்பட்டதன் மூலம் உருவாக்கப்படக்கூடிய வேலைவாய்ப்பு வாய்ப்புகள் குறித்து அரசாங்கம் ஏதேனும் மதிப்பீட்டை நடத்தியுள்ளதா? தனியார் டாக்ஸி ஒருங்கிணைப்பாளர்களுடன் ஒப்பிடும்போது இந்த தளத்தின் முக்கிய அம்சங்கள் என்ன? மேற்கூறிய திட்டத்தின்கீழ் பெண் ஓட்டுநர்களின் பங்கேற்பை ஊக்குவிக்க செய்யப்பட்ட ஏற்பாடுகள் என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

**6. தமிழ்நாட்டில் சமர்த் திட்டத்தின் செயல்பாடுகளை மேம்படுத்துக!**

**சி.என். அண்ணாதுரை**
**க.செல்வம்**





தமிழ்நாட்டில் கைத்தறி, பட்டு மற்றும் ஜவுளித் தொழிலாளர்கள் குறிப்பிடத்தக்க அளவில் உள்ள திருவண்ணாமலை மாவட்டங்களில் சமர்த் (ஜவுளித் துறையில் திறன் மேம்பாட்டுத் திட்டம்) செயல்படுத்த அரசாங்கம் செய்துள்ள மதிப்பாய்வுகள் குறித்து திமுக மக்களவை உறுப்பினர்கள் சி. என். அண்ணாதுரை மற்றும் செல்வம் கேள்வி எழுப்பியுள்ளனர். கடந்த மூன்று நிதியாண்டுகளில் சமர்த்தின் கீழ் சேர்ந்த, பயிற்சி பெற்ற மற்றும் சான்றிதழ் பெற்றவர்களின் எண்ணிக்கை, வேலைவாய்ப்பு மற்றும் சுய தொழில் பற்றிய விவரங்கள் என்ன? கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில், குறிப்பாக திருவண்ணாமலை மாவட்டத்தில் சமர்த் பயிற்சித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட, வெளியிடப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி பற்றிய விவரங்கள் என்ன? இந்தத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற இளைஞர்கள் மற்றும் கைவினைஞர்களுக்கு சந்தைப்படுத்தவும் நிலையான வேலை வாய்ப்புகளை உறுதி செய்யவும் அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் என்ன? என்றும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

### கரூர் மாவட்டத்தில்

# 1528 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகள்!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

கரூர், மார்ச்.12.

கரூர் மாவட்டத்தில், 1528 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

கரூர் மாவட்டத்தில் அரிசி குடும்ப அட்டைகள் 1497 மின்னணு குடும்ப அட்டைகள், சர்க்கரை அட்டைகள் 14. பண்டகமில்லா அட்டைகள் 2. இதர அட்டைகள் 15 என 1528 குடும்ப அட்டைகள் வழங்கும் நிகழ்ச்சி கரூர் அரசு மருத்துவக் கல்லூரி அரங்கத்தில் நடைபெற்றது. கரூர், மண்மங்கலம். அரவக்குறிச்சி கிருஷ்ணராயபுரம். கடவூர், குளித்தலை மற்றும் புகழூர் ஆகிய வட்டங்களுக்கு உட்பட்ட 1528 குடும்பங்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

பின்னர் அவர் கூறியதாவது:

முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021ல் பொறுப்பேற்ற பொழுது கரூர் மாவட்டத்தில் குடும்ப அட்டைகளுடைய எண்ணிக்கை 3.00.828. இந்த ஐந்து ஆண்டுகளில் மட்டும் நம்முடைய மாவட்டத்திற்கு 33,261 குடும்ப அட்டைகள் கூடுதலாக வழங்கப்பட்டு, தற்போது 3.34,089 குடும்ப அட்டைகள் பெற்ற மாவட்டமாக திகழ்ந்து கொண்டிருக்கின்றது. இதுவொரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வு.

2021ஆம் ஆண்டுக்கு முன்பாக நம்முடைய கரூர் மாவட்டத்தில் 585 பகுதி தேர. முழுநேர நியாய விலைக் கடைகள் இயங்கி வந்த சூழலில், இந்த ஐந்து ஆண்டுகளில் கூடுதலாக 154 புதிய ரேஷன் கடைகளைத் திறந்து 739 நியாயவிலைக் கடைகள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

எனவே வந்திருக்கக்கூடிய பெரியவர்கள். தாய்மார்கள், இளைஞர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு நம்முடைய மாவட்ட மக்கள் என்றும் உறுதுணையாக இருந்திட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

எம்.எல்.ஏ.க்கள் ஆர். இளங்கோ, க.சிவகாமசு ந்தரி, மாவட்ட வருவாய் அலுவலர் விமல்ராஜ், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

கரூர் ஊராட்சி ஒன்றியம் பகுதிக்கு உட்பட்ட கிராமங்களில் 26.43 கோடி மதிப்பீட்டில் 24 புதிய வளர்ச்சி திட்ட பணிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தார். 2 முடிவுற்ற பணிகளையும் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். தாந்தோணி ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ரூ. 10 . 17 கோடி மதிப்பில் 74 அரசு நலத்திட்ட பணிகளை தொடங்கி வைத்தார். கரூர் மாவட்ட கலெக்டர் கு.ரவிக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் விமல் ராஜ், ஒன்றிய செயலாளர்கள் கோயம்பள்ளி பாஸ்கரன், வேலுச்சாமி, ஊராட்சிகள் உதவி இயக்குனர் சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரி பி. செங்குட்டுவனின் சகோதரர்

# சின்ன முனியப்பன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



கிருஷ்ணகிரி, மார்ச் 12-

மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டி. செங்குட்டுவனின் மூத்த சகோதரர் நெல் வியாபாரி சின்ன முனியப்பன் அவர்கள் (வயது 85) நேற்று (11.03.2026-புதன்கிழமை) காலை 8.05 மணி அளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். செய்தி அறிந்ததும் அவரது உடலுக்கு கிருஷ்ணகிரி , தர்மபுரி சார்ந்த கழகத்தினர், தொ.மு.ச. சார்ந்த நிர்வாகிகள் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினார்கள்.

அன்னாரது இறுதி ஊர்வலம் அவரது சொந்த கிராமமான கிருஷ்ணகிரி அடுத்த வெலகலஅள்ளியில் நேற்று நடைபெற்றது.



கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா.எம்.பி., பெரம்பலூர் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு அமைப்பாளர் பாரி(எ) அப்துல் பாரூக் உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளதை அறிந்து வடக்குமாதவி சாலையில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று நலம் விசாரித்தார்.உடன் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### மூன்றாவது அணி, நான்காவது அணி என்று எத்தனை அணி வந்தாலும்

# தி.மு.க. அணி மக்களுக்கு நல்லது செய்யும் அணியாகவும் மக்கள் வரவேற்கக் கூடிய அணியாகவும் இருக்கிறது!

## புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!



புதுக்கோட்டை, மார்ச் 12-

புதுக்கோட்டை மாநகராட்சிக்குட்பட்ட வடக்கு ராஜ வீதியில் உள்ள நகர் மன்ற வளாகத்தில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி இணைந்து உடல் உறுப்பு தானம் மற்றும் முன்பதிவு முகாமில் அமைச்சர் எஸ். ரகுபதி கலந்துகொண்டு சிறப்பித்தார். இந்த நிகழ்வில் மாநகர மேயர் திலகவதி செந்தில், மாநகர துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் ராமச்சந்திரன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேசுகையில்:

தட்டுப்பாடு நீக்க வேண்டிய வழிவகைகளையும் மாற்று வழி வகைகளையும் தமிழ்நாடுஅரசு நிச்சயமாக செய்து தரும், அவர்களுக்கு மாற்று வழி எதுவும் ஏற்படுத்தி தருவார்கள்.

மாநாட்டை பொருத்தவரை கட்சி நிர்வாகிகள் மட்டும்தான் 10 லட்சம் பேர் கலந்து கொண்ட திமுகவின் கட்சி நிர்வாகிகள் கூட்டம் தான் அதுவே மாநில மாநாட்டை மிஞ்சுகின்ற அளவிற்கு நடைபெற்றுள்ளது. கிளைச் செயலாளர், வட்டச் செயலாளர், ஒன்றிய செயலாளர், பேரூர் செயலாளர் நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் அணி அமைப்பாளர்கள் என்று ஏறக்குறைய 10 லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் நிர்வாகிகள் மட்டும் பங்கேற்ற மாநாட்டை நடத்தி காட்டிய திமுகவால் முடியும் என்று நேற்றைய மாநாடு நிரூபித்துள்ளது

பவன் கல்யாண் பேசினாலும் அவன் கல்யாணம் பேசினாலும் எங்களுக்கு கவலை இல்லை. உங்களை பொறுத்தவரை மூன்றாவது அணி நான்காவது அணி என்று எத்தனை அணி வந்தாலும் எங்கள் அணி மக்களுக்கு நல்லது செய்யும் அணியாகவும் மக்கள் வரவேற்கக் கூடிய அணியாகவும் இருக்கிறது.

விஜயை நாங்கள் ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை. அவர் முட்டாள்தனமாக பேசி வருகிறார். அவர் படத்திற்கு 200 கோடி ரூபாய் வாங்கிறார் என்றால் பிளாக்கில் டிக்கெட் வைத்து தான் அவர் வாங்க முடியும் ஒரு டிக்கெட்டின் விலை என்பது ரூபாய் என்றால் பிலாகில் ஆயிரம் ரூபாய். 920 ரூபாய் கருப்பு பணத்தை வாங்கி தான் அவருக்கு கொடுக்கிறார்கள். இதையெல்லாம் பேசினால் விஜய் மாட்டிக்கொள்வார். அவர் அறியாமலும் தெரியாமலும் பேசுகிறார். எடப்பாடி பழனிச்சாமி ஆட்சியில் நடைபெறாத கொடுமைகளா தற்போது நடக்கிறது. இந்தியாவில் மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்நாடு எப்படி இருக்கிறது என்பதை தான் பார்க்க வேண்டும்.

நாங்கள் எந்த குற்றவாளியும் தப்பிக்கவிடவில்லை காப்பாற்றவில்லை. நாங்கள் தண்டிக்கின்றோம் கைது செய்கின்றோம். நடவடிக்கை எடுக்கின்றோம் விரைந்து அவர்களுக்கு தண்டனையும் வாங்கி தருகின்றோம் இதைவிட அரசு என்ன செய்ய முடியும்.

இலவசங்கள் என்று நாங்கள் சொல்லவில்லை. அவர்களுக்கு உரிமை என்று தான் சொல்கின்றோம். மகளிர் உரிமைத் தொகை என்று வழங்குகின்றோம். அந்தப் பெண்கள் மற்றவரிடம் எதிர்பார்ப்பதை விட அரசை ஆயிரம் ரூபாய் கொடுக்கும்போது மகிழ்ச்சி அடைகிறாள்.

இலவசமாக கருத்தில் கொள்ள முடியாது. இது உதவித்தொகை அல்ல உரிமைத் தொகை.

நாங்கள் 2000 ரூபாய் தர முடியும் என்பது எங்களால் முடியும் எடப்பாடி பழனிச்சாமியால் அது முடியாது.

காவல்துறை அவர்களது பணிகளை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். ஏதாவது அசம்பாவிதம் நடந்து விட்டால் முழுக்க காவல்துறையை மட்டுமே குற்றம் சொல்ல முடியாது. அதனால் காவல்துறைக்கு வக்காலத்து வாங்குகின்றோம் என்று அர்த்தமல்ல. அதே நேரத்தில் சில அசம்பாவிதங்களாலும் தவறுதலாலும் லாக்கப் டெத் நடக்கிறது. எடப்பாடி ஆட்சியில் நடந்ததைப் போல அடித்துக் கொள்வதெல்லாம் போலீசார் தற்போது செய்வதில்லை.

போராட்டங்கள் அனைத்தையும் முடிவுக்கு கொண்டு வந்து கொண்டிருப்பவர் தான் தமிழ்நாடு முதலமைச்சர்.

தமிழக வெற்றிக் கழகம் மாற்றுக் கட்சி அல்ல. அது விளம்பரக் கட்சி. பாஜகவின் ஏ டீம் பி டீம் அல்ல சீ டீம் விஜய். இதை நான் ஆரம்பத்தில் இருந்தே சொல்லி வருகிறேன்.

இன்னும் சொல்லப் போனால் அமித்சாவின் ஸ்லீப்பர்செல் விஜய் என்று தெரிவித்தார்.



மயிலாடுதுறையில் 5வது ஆண்டாக கழக பொதுக்குழு உறுப்பினர் ஹர்ஷத் ஏற்பாட்டில் இஃப்தார்நோன்பு திறப்பு நிகழ்ச்சி மயிலாடுதுறை சிக்னேச்சர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளர்களாக மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் ஜெக.வீரபாண்டியன், இராம. இளங்கோவன், ஜி.என். ரவி, முத்து.மகேந்திரன், கே.ஜி. சீனிவாசன், மு.ஞானவேலன், எஸ். செல்வமணி, கண்ணகி கண்ணீர், மகா. அலெக்சாண்டர், பி.எம். அன்பழகன், எம்.அப்துல் மாலிக், அமிர்த.விஜயகுமார், ப.முருகமணி, ஞான. இமயநாதன், மூவலூர் எம்.மூர்த்தி, என்.இளையபெருமாள், மங்கை எம்.சங்கர், ஏ. ஆர்.ராஜா, கு.வைத்தியநாதன், ஏ.ஜி.ஜெ. பிரபாகர், பஞ்சு.குமார், குண்டாமணி ( எ) என்.செல்வராஜ். ம. சுப்பராயன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.